## ஆழத்து முத்துக்கள் 165

- ப. ஸ்ரீஸ்கந்தன் -

# தமிழ் சொரியும் நந்தவனம் கவிஞர் வி. கந்தவனம்

கவிஞர் வி. கந்தவனம் அவர்களைக் கனடாவில் சந்திக்கக் கிடைத்ததும் அவரது பல்வேறு ஆற்றல்களை நேரில் சுகிர்த்த அனுபவங்களும் அவர் காலத்தில் நாங்கள் வாழ்வதும் அலாதியான நிகழ்வுகள். கவிஞராக, எழுத்தாளராக, நாடகக்கலைஞனாக, இலக்கியப் பேச்சாளராக, சமயச் சொற்பொழிவாளராக, சமூக ஆர்வலராக, அமைப்புகளின் தோற்றுனராக என்று அவர் வகிக்கும் பாகம் பலமானது.

இவர் சாவகச்சேரி நுணாவில் மேற்கைச் சேர்ந்த வேறுப்பிள்ளை விநாயகர் தம்பியையா சின்னம்மா இணையரின் மகனாக 28.10.1933ல் பிறந்தவர். ஆரம்பக் கல்வியை நுணாவில் மேற்கு கணேச வித்தியாசாலையிலும் இடைநிலைக்கல்வியை சாவகச்சேரி இறிபேக் கல்லூரியிலும் கற்று சென்னைப் பல்கலைக்கழகத்தில் கலை இளமாணிப் பட்டம் பெற்றவர். குரும்பசிட்டி இளையப்பா அவர்களின் மகள் தவமணியைக் கரம் பிடித்தவர். மகள் வாணி மகன் வாரணன்.

ஆரம்பத்தில் இறிபேக் கல்லூரியில் அலுவலக இலிகிதராகக் கடமையேற்ற இவர் பின்னர் மாத்தளை புனித தோமையர் கல்லூரி, வயாவிளான் மத்திய மகாவித்தியாலயம் ஆகியவற்றில் ஆசிரியராகக் கடமையாற்றினார். அடுத்து, வவுனிக்குளம் யோகபுரம் மகாவித்தியாலயம், அளவெட்டி அருணோதயக் கல்லூரி என்பவற்றின் அதிபராகப் பொறுப்பேற்று அவற்றைச் சிறப்பாக வழிநடத்தினார். 1980ல் தென் ஆபிரிக்காவில் உள்ள இலெசூத்து அரசின் திக்காக்கெங் உயர் பள்ளியில் சிரேட்ட ஆங்கில ஆசிரியராகவும் திரான்ஸ்கி என்ற மாநில சுயாட்சி அரசின் புனித கத்பேட்ஸ் உயர் பள்ளியில் மானுடவியல் துறைத் தலைவராகவும் பணியாற்றினார். 1988ல் இவர் கனடாவுக்குக் குடிபுகுந்தார்.

சிறுவயதிலேயே கலைகளில் ஆர்வம் கொண்ட இவர் ஓவியர் கனகசபையிடம் ஓவியக்கலையையும் சங்கீதபூஷணம் நடேசன் அவர்களிடம் சங்கீதமும் கற்றுத் தேர்ந்தார். தனது 19வது வயதில் ஈழகேசரி நடத்திய கட்டுரைப் போட்டியில் முதற் பரிசு பெற்று இலக்கிய உலகில் கால்பதித்தார்.

*'காலத்தில் ஊழியொரு – கவிநடை*
*கண்டு கருத்துக்களை*
*கோலக் கவிதைகளில் - உறுதிகைக்*
*கொண்டு பொழிந்துவிட்டான்.'*

பாரதி பற்றி இவர் பாடிய கவிதை இது. கவிஞர் கந்தவனம் அவர்களுக்கும் இது



பொருந்தும். தமிழ் உலகுக்கு இவரை அறிமுகம் செய்து வைத்தது இவர் யாத்த கவிதைகளே. இலகு தமிழ், ஓசை நயம், நகைச்சுவை என்று இவர் பாடும் கவிதைகள் பார்வையாளர்களைக் கட்டிப்போடும். 1967ல் ஈழநாடு ஆசிரியர் கோபாலரத்தினம் இவரைக் கவிஞர் என்று விளித்துக் கௌரவித்தார்.

இலங்கையில் மலைநாடு உட்பட தமிழர்கள் வாழும் சகல பகுதிகளிலும் இவரது கவிதை ஒலித்திருக்கிறது. பெரும்பாலான கவியரங்குகளில் தலைவராக இருந்து வழிநடத்தும் தகுதி பெற்றவராக விளங்கினார். சிறந்த நகைச்சுவையாளர். தமிழோடு விளையாடுவார். இவர் எழுதிய கவிதா நூல்களை அவரது நூல் பட்டியலில் பார்க்கலாம். தற்போது ஞாயிறுதோறும் மாணவர்களுக்கு கவிதை இலக்கியத்தைக் கற்பித்துவருகிறார். அத்துடன் கீதவாணி வானொலியில் கவிதா நிகழ்ச்சியையும் நடத்திவருகிறார்.

கவிஞர் கந்தவனம் அவர்கள் கவிதையைப் போல் நாடகக் கலையிலும் மிகுந்த ஈடுபாடு உடையவராக இருந்தார். இதன் உச்சமாக இலங்கைப் பல்கலைக்கழகத்தின் கொழும்பு வளாகம் முதன் முறையாக மேற்கொண்ட நாடக கல்விச் சான்றிதழ் படிப்பில் இணைந்து அதில் சிறப்புச்சித்தி பெற்றவர். தனது 14ம் வயதில் இறிபேக் கல்லூரி சாவகச்சேரி தெய்வேந்திராப் படமாளிகையில் நடத்திய கலைவிழாவில் மேடையேற்றிய 'The School Master'ல் நடித்ததே இவரது முதல் நாடகப் பிரவேசமாகும். இவ்வாறு பாடசாலை நாட்களில் 'இரத்தக் கண்ணீர்', 'ஹலோ ஹலோ', 'April Fool', 'மனம் போல வாழ்வு' போன்ற நாடகங்களிலும் நடித்திருந்தார். மேலும் ஆசிரியரான பிறகு நா. இராசரத்தினத்தின் 'விதியா சதியா', கலைஞர் A.T. பொன்னுத்துரையின் 'நிறைகுடம்', 'இறுதிப்பரிசு', 'நாடகம்' ஆகிய நாடகங்களிலும் நடித்துச் சிறப்புச் சேர்த்தார்.

கனடாவில் இவர் முதன் முதலாக மேடையேறியது மகாஜனக் கல்லூரி நடத்திய கலைவிழாவில் மேடையேறிய 'விவாகரத்து' என்ற நாடகத்திலேயே. இந்நாடகத்தை இவரே எழுதி இயக்கியதோடு அதில் நடித்துமிருந்தார். அடுத்து மனவெளி கலையாற்றுக் குழுவினருக்காக வி. திவ்வியராஜன் இயக்கிய குழந்தை ம. சண்முகலிங்கத்தின் 'நரகோடு சுவர்க்கம்' நாடகத்தில் முக்கிய பாத்திரம் ஏற்றிருந்தார். மகாஜனக் கல்லூரிக் கலைவிழாவுக்காக கதிர் துரைசிங்கம் எழுதி இயக்கிய 'என்னத்தைச் சொல்லி' என்ற நாடகத்தில் நடித்ததோடு மனவெளி கலையாற்றுக்குழுவினரின் அரங்காடலுக்காக 'சாகாத சரித்திரங்கள்' என்ற கவிதை நாடகத்தைத் தயாரித்து அதில் நடித்துமிருந்தார். பி. விக்னேஸ்வரனின் 'வாழ்ந்து பார்க்கலாம்' என்ற வானொலி நாடகத்தில் இவர் நடித்ததும் இங்கு குறிப்பிடத்தக்கது.

நடிகர், இயக்குனராக மட்டுமல்லாது 'பரீட்சை நெருங்குகிறது', 'புத்திமான் பலவான்', 'பூனைகள் இராச்சியம்', 'இரண்டுக்கும் நடுவே' போன்ற சிறுவர் நாடகங்களை இவர் எழுதி மேடையேற்றியுள்ளார். இவர் தயாரித்த 'அசோகவனம்', 'கட்டப்பொம்மன்' ஆகிய நாடகங்கள் இலங்கை கல்வித் திணைக்களம் நடத்திய நாடகப் போட்டிகளில் முதற்பரிசைப் பெற்றுக்கொண்டன.

புகழ்பூத்த யாழ். நாடக அரங்கக் கல்லூரியை ஆரம்பித்தவர்களில் ஒருவராக இருந்ததுடன் அதன் விரிவுரையாளராகவும் கவிஞர் பங்காற்றினார். மேலும் நாடகக் கலையை ஒரு பாடமாக உயர்தர வகுப்பு மாணவர்களுக்குக் கற்பித்த முதல் ஆசிரியர் என்ற பெருமையும் இவருக்குண்டு.

நாவன்மை நிறைந்த கந்தவனம் அவர்கள் சிறந்த இலக்கிய, சமயச் சொற்பொழிவாளராக விளங்குகிறார். எந்தப் பொருளையும் ஆழமாகவும் அத்தோடு நகைச்சுவையையும் கலந்து பேச வல்லவர். கணீரென்ற குரல் அவருக்கு. 1957ல் கொழும்புத்துறை இளந்தமிழர் மன்றத்தில் தனது முதற் சொற்பொழிவை திருக்குறள் என்ற தலைப்பில் நிகழ்த்தினார். கனடா, சுவிஸ்லாந்து, இந்தியா, டென்மார்க், ஜேர்மனி, மலேசியா, ஹொலாந்து நாடுகளில் நடைபெற்ற இலக்கிய, சமய விழாக்களில் பேருரைகளை நிகழ்த்திய பெருமைக்கு உரியவர். தற்போது வாரம் தோறும் பெரியபுராணம் குறித்து நல்லூர் முருகன் ஆலயத்திலும், திருமந்திரம் பற்றி ஆத்ம ஜோதி இல்லத்திலும் தொடர் சொற்பொழிவுகளை நடத்தி வருகிறார்.

கவிநாயகர் வி.கந்தவனம் அவர்கள் இது வரை 81 நூல்களை எழுதியுள்ளார். மேலும் சிட்டுக்குருவி, வித்தியானந்தமாலை, பூச்சரம், அரும்பு போன்ற பல நூல்களில் தொகுப்பாசிரியராகவும் இருந்துள்ளார். புவியியல் பாட நூல்களையும் எழுதியுள்ள இவர் பல மணிவிழா மலர்களின் ஆசிரியராகவும் பணியாற்றியுள்ளார்.


ஆங்கிலத்திலும் புலமை பெற்ற இவர் ஒன்ராரியோ அரசின் சில வழிகாட்டி கைநூல்களைத் தமிழுக்கு மொழி பெயர்த்துள்ளார். Lasting Light, 12 Short Stories ஆகிய இரு ஆங்கில நூல்களையும் எழுதியுள்ளார். கனடிய தேசிய கீதத்தைத் தமிழில் இவரே மொழிபெயர்த்தார் என்பது நினைவுகொள்ளத்தக்கது.

சமூக ஆர்வலரான கந்தவனம் அவர்கள் பல இலக்கிய, சமய நிறுவனங்களை ஆரம்பித்த மூலவர்களில் ஒருவராக விளங்குகிறார். மாத்தளை இலக்கிய வட்டம், யாழ். இலக்கிய வட்டம், கனடா தமிழ் எழுத்தாளர் இணையம், கனடா தமிழ்க் கவிஞர் சங்கம் போன்ற இலக்கிய அமைப்புகளும் ஒன்ராரியோ இந்து சமயப்பேரவை, சிவத்தொண்டன் நிலையம், ஆத்மஜோதி தியான நிலையம் போன்ற சமய நிறுவனங்களும் குரும்பசிட்டி நலன்புரிச் சங்கம், வயாவிளான் மத்திய கல்லூரி பழைய மாணவர் சங்கம் ஆகிய சமூகநல அமைப்புக்களும் இதில் அடங்கும்.

இவ்வாறு பல்வேறு ஆளுமை கொண்ட கந்தவனம் அவர்களுக்கு கவிமணி, மதுரகவி, இலக்கியவித்தகர், திருவருட்கவி, கலாமணி, சைவதுரந்தரர், திருநெறிப் பாவலர், சிவநெறிச்செல்வர், வித்தியாபூஷன், சிவநெறிச் செம்மல், சிவத்தமிழ் பாவலர், பாவரசர், தமிழ்வேள், அருள்மாமணி, கவிக்களஞ்சியம் என்ற பட்டங்கள் கிடைக்கப் பெற்றுள்ளன. அண்மையில் ஒன்ராரியோ அரசின் தொண்டர் சேவைக்கான விருதும் வழங்கப் பெற்றவர்.

கவிநாயகருக்கு அறிமுகம் தேவையில்லை. அவரைப் பற்றி எழுதப்பட்ட நூல்கள் பல வெளிவந்துவிட்டன. மேலாக கனடிய ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தில் இளையபாரதி நடத்திய நேர்காணல் 500 பக்கங்களைக் கொண்ட நூலாகப் பதியப் பட்டுள்ளது.

எமது இந்தப் பதிவு பெரும் காப்பியம் ஒன்றை ஆழத்து முத்துக்கள் என்ற ஒரு பக்கத்துக்குச் சுருக்கித் தருகிற முயற்சியே. கவிஞரின் தமிழ், சமய, கலை, இலக்கிய, சமூகப் பணிகளுக்குத் 'தாய் வீடு' குழுமத்தினரின் சமர்ப்பணம் இது.



sriskandan@thaiveedu.com

### கவிநாயகர் வி. கந்தவனம் அவர்களின் நூல்கள்

- 1½ ரூபாய்
- இலக்கிய உலகம்
- ஏன் இந்தப் பெருமூச்சு?
- கூனியின் சாதனை
- கீரிமலையினிலே!
- நுணாவிலூர்
- நல்லூர் நாற்பது
- கொல்லாபுரி வீரகத்தி விநாயகர் திருவூஞ்சல்
- பாடு மனமே!
- உய்யும் வழி
- பரீட்சையிற் சித்தியடைவது எப்படி?
- கவியரங்கில் கந்தவனம்
- இலங்கையில் ஆசிரியத் தொழில்
- Hail, The Tamil Tigers!
- விநாயகப்பா – முதலாம் பாகம்
- ஒன்று பட்டால்
- மணிக்கவிகள்
- இயற்கைத் தமிழ்
- எழுத்தாளர்
- முத்தான தொண்டர்
- புதிய சைவ வினாவிடை – 1
- தங்கம்மா நான்மணி மாலை
- பத்துப்பாட்டு
- ஆறுமுகம்
- கனடா கந்தசுவாமி அகவல்
- 12 Short Stories
- Lasting Ligh
- சிவபுராண தத்துவம்
- கனடாவிற் சைவ சமயம்
- அது வேறுவிதமான காதல்
- சிவ வழிபாடு
- புதிய சைவ வினாவிடை - 2
- கந்தன் கதை
- ஓ கனடா!
- வரிக்கவிகள்
- குருவழிபாடு
- விநாயகப் பெருமானும் அகத்தியரும்
- முருகப் பெருமானும் அவ்வையாரும்
- விநாயக வெண்பா
- விநாயக விருத்தம்
- பொங்கு தமிழ்
- கவிதை மரபு
- மொன்றியல் முருகன் திருவூஞ்சல்
- வானதி
- ஆன்மீகக் கவிதைகள்
- தென்னகத்தில் என்னகத்தார்.
- பாவாரம்
- சுவிஷ் விஷ்ணுதுர்க்கா தேவி அகவல்
- விநாயகப்பா
- நாடக அனுபவங்கள்
- வாழும் வாசகம்
- கதிர்வேலர் கவித்தமிழ்
- சிவயோக சுவாமிகள் திருவெண்பா
- நற்பொருள் நாற்பது
- புதுவாழ்வுப் பூவண்டு
- இளையப்ப வெண்பா
- நால்வர் நான்மணிமாலை
- விபுலாநந்த வெண்பா
- விசுவலிங்க வெண்பா
- நாவலர் பெருமான் நான்மணிமாலை
- சிவநெறிச் சிந்தனை
- முன்னறிதெய்வம்
- புலவர்மணி வெண்பா
- இலண்டன் உயர்வாசற்குன்று முருகன் திருவூஞ்சல்.
- திலகவதியார் திருவெண்பா
- சேக்கிழார் திருவெண்பா
- ஜேமனி கம் காமாட்சி அம்பாள் அகவல்
- காதல் வாழ்க்கை
- சோமசுந்தரப் புலவர் நான்மணி மாலை
- செபரத்தின வெண்பா
- வித்தியானந்த வெண்பா
- பண்டிதமணி வெண்பா
- அகத்தியர் வெண்பா
- வியாசர் வெண்பா
- நமசிவாய வெண்பா
- பொன்னைய வெண்பா
- திருமூலர் திருவெண்பா
- ஐங்கலை வெண்பா
- ஐம்பொறி வெண்பா
- ஐம்பூத வெண்பா
- கவலைக்கு மருந்து